[1st August 1966

***கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி பாராளுமன்றத்தில் 'பாலட்' எடுக்கிற வழக்கம் இருக்கிறது. 'பாலட்' இல்லாமலேயே முதலில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் எழுந்திருந்து அதற்கு ஆதரவு அளித்திருக்கிறார்கள். இதில் எனக்கு ஒன்றும் இல்லை. மூழ்கிப் போகிறவனுக்கு எவ்வளவு ஆழம் இருந்தால் என்ன? அதே போல் ஒரு தீர்மானம் இருந்தால் என்ன, பல தீர்மானங்கள் இருந்தால் என்ன, நான் ஆட்சேபிக்கவில்லை. இந்த மன்றத்தில் ஒரு நல்ல சம்பிரதாயம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

MR. SPEAKER : All right. I shall examine the matter and, I will take it up to-morrow morning.

IV.—POINT OF ORDER *RE*. PRECEDENCE FOR THE NO-CONFIDENCE MOTION.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு இந்தச் சபை அனுமதி வழங்கியிருக்கிறது. அதை எப்பொழுது விவாதத்திற்கு வைத்துக்கொள்ளலாம் என்பதைத் தாங்கள் குறிப்பிடுவதாக இருக்கிறீர்கள். அதற்கு மத்தியில் இந்த மன்றத்தின் சம்பிரதாயத்தையும், பாராளுமன்றத்தின் நடைமுறையில் உள்ள சம்பிரதாயங்கள் சிலவற்றையும் அனுசரித்து, தங்களுடைய மேலான கவனத்திற்குச் சில வார்த்தைகளைக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்பது. . . .

MR. SPEAKER : What is the point of order? Let the hon. Member state the point of order first and then advance his argument.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அந்த மன்றத்திற்கு 12 மணிக்குப் போகவேண்டியிருக்கிறது. அதற்குள் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும். 10 நாட்களுக்குள் என்றைக்கு வேண்டுமானாலும் இந்த விவாதத்தை வைத்துக்கொள்ளலாம். 10-வது நாளைக்குக்கூட வைத்துக் கொள்ளலாம். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசி என்றைக்கு இந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யலாம். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் எலெக்ட்ரிசிடி போர்டைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை, அதைப் பற்றி ஒன்றும் தவறு கூறப்படவில்லை. எலெக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட்டின் மீது விவாதத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று சொல்லப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படிச் சொல்வதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Before the Chair fixes the time for taking up the motion how can any point of order be raised? After I fix the

1st August 1966] [MR. SPEAKER]

time, if the hon. Member has got any grievance, he can raise it and I do not think that he can have any grievance. Now, I am not going to allow the hon. Member to speak any further.

திரு. கே. ஏ. மதியழகன் : என்னுடைய கருத்தை விளக்கு கிறேன். நம்முடைய டெல்லி பாராளுமன்றத்தில். . . .

MR. SPEAKER : I have already told the hon. Member that I will intimate the time.

SRI K. A. MATHIALAGAN : This House must adjourn.

MR. SPEAKER : No, I am not going to allow it.

So far as the fixation of time is concerned, the Speaker should do it in consultation with the Government. I have promised to do that. After the fixation of time, if the hon. Member has got anything further to say, he can do so. Now, I am not going to allow him to speak about it.

SRI K. A. MATHIALAGAN : My submission is not with regard to time. My point is that the House should not proceed to discuss any other matter. Recently in the Lok Sabha the No-Confidence Motion was given precedence over the Motion relating to the economic situation, which was postponed.

MR. SPEAKER : I overrule the point raised by the hon. Member.

V.—ANNOUNCEMENT.

PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER : I have to announce to the House that under rule 14(1) of the Madras Legislative Assembly Rules, I have nominated the following six Members of the Assembly to be the Panel of Chairmen for the present sitting of the Legislative Assembly :—

1. Sri S. Ramaswami Naidu.
2. Srimathi P. K. R. Lakshmikantham.
3. Sri C. Chiranjeevulu Naidu.
4. Sri M. V. Karivengadam.
5. Sri T. Karcha Gowder.
6. Sri M. Dhandayuthapani.

IV.—POINT OF ORDER *RE*. PRECEDENCE FOR THE NO-CONFIDENCE MOTION—*cont*.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எழுந்தார்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார்.

திரு. மீ. கலியாணசுந்தரம் . நான் முதலில் எழுந்திருந்தேன். ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். இப்பொழுது எலெக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட் சம்பந்தப்பட்ட மட்டிலே இந்தச் சபை வோட்டு

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [1st August 1966

அளிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இந்தச் சபை முன்பு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இருக்கும்பொழுது அதை விவாதிக்கலாமா, கூடாதா என்பதைப்பற்றி அபிப்பிராயம் சொல்லவில்லை. லோக் சபாவில் நடந்தது வேறு. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் முழு வன்மையையும் குறைக்கும் ஒரு நோக்கத்தோடு வேறு ஒரு தீர்மானத்தை எகனுமிக் சிச்சுவேஷன் பற்றிய ஸ்டேட்மெண்டைக் கொண்டு வந்து விவாதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் வேறு ஒன்று சொல்வேன். சப்ளிமெண்டரி பட்ஜெட் விவாதத்தையாவது ஒத்திப்போடவேண்டும் என்று நான் சொல்வேன்.

கனம் சபாநாயகர் : இதிலே பாயிண்டு ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது? சப்ளிமெண்டரி பட்ஜெட் வரும்பொழுது வேண்டுமானால் இதைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

Sri K. A. MATHIALAGAN : The Governor has fixed the date ......

கனம் சபாநாயகர் : அந்த விஷயம் வரும்பொழுது இதைப் பற்றிச் சொல்லிக்கொள்ளலாம். இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியமில்லை.

VI. DISCUSSION ON THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1966-67.

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1966-67-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இந்தச் சபையிலே வைத்து, முன்னுரையாகச் சொல்லவேண்டியதை அச்சிட்டு அங்கத்தினர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அதனால் அதை நான் திரும்பவும் படிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆகவே, சபை விவாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது தான் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய அறிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது விவாதத்தைத் தொடங்குவதைவிட, அமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை யெல்லாம் சொன்ன பிறகு தொடங்குவது தான் சரி என்று கருதுகிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களுடைய அறிக்கை இப்பொழுது தான் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதைப் படிக்கிற முறை கொண்டே மற்றவர்கள் அதைப் புரிந்துகொண்டு பின்னால் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால், அமைச்சர் அவர்களைப் படிக்கச் சொல்வது முறை என்று தான் சொல்கிறோம். வேறு ஒன்றும் இல்லை.

Mr. SPEAKER : The Hon. Minister will read the statement.